நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.362/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மதுவந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ரங்கசாமி |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 31 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 20–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.35 PM

1. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் நேரத்தில் என் அம்மா சந்திரா, என் அப்பா ராஜேந்திரன், தங்கை கௌசல்யா, என் மகன் ஜஸ்வீன், சித்தப்பா ரமேஷ்குமார், சித்தி உமா மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் உட்பட 15–20 பேர் இருந்தனர்.

சம்பவம் நடந்தது இரவு 08.15 மணியாகும். என் கணவர் எங்கள் வீட்டிற்குள் வந்துதான் தகராறு செய்தார்.

2. மேற்படி தகராறில் ஏற்பட்ட காயங்களுக்காக மேட்டூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். தகராறில் இரத்தகாயம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எதிரியின் தங்கை கணவர் சக்தி ஆவார். சக்தியின் தங்கை கணவர் செல்வம் என் கணவருடன் வந்திருந்தார்.

3. சம்பவம் நடைபெற்றபிறகு எதிரியும் அவருடன் வந்தவர்களையும் அக்கம்பக்கத்தினர் புகார் அளித்ததின் பேரில் காவல் நிலையத்தில் இருந்து வந்தவர்கள் அழைத்து சென்றுவிட்டார்கள். சம்பவம் தொடர்பாக அக்கம்பக்கத்தினர்தான் புகார் கொடுத்தார்கள் என்றாலும் நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.

4. சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனையில் இருந்து வந்தபிறகு 3 நாட்கள் கழித்து அடுத்தநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடைபெற்றபோது கார்த்திக், சேட்டான், மாது, மீனா என்பவரின் கணவர் மற்றும் நிறைய நபர்கள் சண்டை விலக்கிவிட்டார்கள்.

5. சம்பவத்தின்போது எனது தங்கைக்கு திருமணம் ஆகவில்லை. எங்களுடன்தான் இருந்தார். இந்த சம்பவத்தில் என்னை தவிர வேறு யாருக்கும் அடிப்படவில்லை. வீட்டிற்குள்ளாக சம்பவம் நடைபெற்ற என்னை தரதரவென இழுத்து தெருவுக்கு வந்துவிட்டார். சம்பவத்தின் போது எங்கள் வீட்டுக்கு முன்னால் உள்ள சாலை மண்சாலையாக இருந்தது. வீட்டு வாசலில் இரண்டு படிகள் உள்ளது.

6. மண்சாலை வரை இழுத்து வந்துவிட்டார். மண்சாலையில் என்னை இழுத்து வந்ததில் சிராய்ப்பு காயங்கள் எனக்கு ஏற்படவில்லை. மண்சாலையில் சம்பவம் நடைபெறவில்லை. முடியை பிடித்து தரதரவென இழுத்து வந்தார். 2015 ல்

திருமணம் நடைபெற்று 2016 ம் ஆண்டு முதல் பிரிந்துதான் வாழ்ந்து வருகிறோம். இந்த சம்பவம் 2020 ம் ஆண்டுதான் நடந்தது.

7. என் கணவர் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு HMOP.NO. 122/2016 எண்ணில் பதிவுசெய்தார். அதன்பிறகு இதே நீதிமன்றத்தில் DVC.2/2017 என்ற எண்ணில் குடும்ப வன்முறை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவுசெய்தேன் என்றால் சரிதான்.

8. எதிரி சம்பவயிடத்திற்கு எதற்காக வந்தார் என்றால் குறிப்பிட்டு என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. என் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் என் கணவர் என்னை சேர்ந்து வாழ அழைத்துச்செல்லதான் வந்தார் என்றாலும் எனக்கு அவருடன் சேர்ந்து வாழ பிடிக்காததால் என் கணவரை பழிவாங்கும் எண்ணத்தில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

9. ஏற்கனவே குடும்ப வன்முறை வழக்கை தாக்கல் செய்தும் அளைக்களித்து அதனால் எந்த பயனும் இல்லாததால் சிறைக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறான பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி அமைதியான முறையில் வீட்டிற்கு சென்று தங்களிடம் பேசினார் என்றாலும் வீட்டிற்குள் நடந்த சம்பவத்தை வீட்டிற்கு வெளியே நடந்ததாக பொய்யான காரணங்களை கூறி இவ்வாறான பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 05.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**